

# ஆலமரம் மாதிரிதான் குடும்பமும்!

**உங்களில் எத்தனை பேருக்கு உங்கள் கொள்ளுத் தாத்தா - கொள்ளுப் பாட்டியின் பெயர் தெரியும்? அவர்கள் என்னவாக இருந்தார்கள்? இன்னும் இப்படி அத்தைப் பாட்டி, மாமாத் தாத்தா என உங்களது சொந்த பந்தங்கள் எத்தனை பேர்? அவர்களில் எத்தனை பேர் உயிருடன் இருக்கிறார்கள்?**

**பாட்டி வைக்கும் மிளகு ரசம் பிரமாதமாக இருக்கும் என வீட்டில் எல்லோரும் சொல்கிறார்கள்... உங்களுக்கு அதை செய்யத் தெரியுமா?**

'தெரியாது' என்பதும், 'இத்தனை நாளா அதையெல்லாம் யோசிச்சதே இல்லையே' என்பதும்தான் பெரும்பாலானவர்களின் பதிலாக இருக்கும். கடந்துபோன வாழ்க்கையின் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கவோ, அந்த நினைவுகளை அசைபோடவோ, வீட்டுப் பெரியவர்களுடன் ஓய்வாக உட்கார்ந்து பேசவோ யாருக்கும் அவகாசமோ, அவசியமோ இருப்பதில்லை. பரணில் தூசுபடிந்து கிடக்கும், திறக்கப்படாத கள்ளிப்பெட்டி போல, வாழ்க்கையில் மறைந்து கிடக்கும் சுவாரசியங்கள் எத்தனையோ.

'ஹம்' - அப்படியொரு சுவாரசியப் பெட்டகம்!

சென்னையைச் சேர்ந்த பத்மினி சரத்குமாரும், மஞ்சு ஜெயினும் வடிவமைத்துள்ள 'ஹம்' ('நாம்' என அர்த்தம்) என்கிற ஃபேமிலி மேனுவல், ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவசிய மான பொக்கிஷம்.



"நானும், மஞ்சுவும் ஃப்ரெண்ட்ஸ். மஞ்சுவோட குழந்தை படிக்கிற ஸ்கூல்ல அவளுக்கு ஒரு அசைன்மென்ட் கொடுத்திருந்தாங்க. 'உங்க குடும்பத்தை மரமா வரைஞ்சு, மூணு தலைமுறை உறவுகளைக் குறிச்சு, அதுல நீ எந்த இடத்துல இருப்பேன்னு எழுதிட்டு வா'ன்னு சொல்லியிருக்காங்க. மஞ்சுவுக்கும், அவங்க கணவருக்குமே பல விஷயங்கள் தெரியாம, சொந்த பந்தங்கள் எல்லார்கிட்டயும் கேட்டு, அந்த புராஜக்டை முடிச்சிருக்காங்க.

அந்த அனுபவத்தை என்கிட்ட சொல்லி, ஃபேமிலி மேனுவல் தயாரிக்கலாமானு கேட்டாங்க. சுவாரசியமா இருந்தது. எங்க கம்பெனி ஊழியர்களுக்குக் கல்யாண நாளைக்கு கிஃப்டா கொடுக்கலாம்ங்கிற ஐடியால இதுக்கு வடிவம் கொடுத்தோம்'' என்கிறார் போலாரிஸ் நிறுவனத்தின் சீனியர் வைஸ் பிரெசிடென்ட்டும், 'ஹம்' புத்தகத்தின் ஆசிரியர்களில் ஒருவருமான பத்மினி.

"கூட்டுக்குடும்பம்ங்கிற விஷயத்தையே மறந்துட்டு வரோம். இப்ப உள்ள தலைமுறைக்கு தாத்தா-பாட்டி பேரோ, அவங்க பின்னணியோ கூட தெரியறதில்லை. படிப்பு, வேலைனு பல காரணங்களுக்காக பாரம்பரிய வேர்களை இழந்து, சிதறிப் போய் நிக்கறோம். ஆனா, நின்னு நிதானமா யோசிச்சுப் பார்த்தா, நாம இழந்த விஷயங்களோட விலை ரொம்பப் பெரிசுன்னு புரியும். இந்தப் புத்தகத்தைப் பத்தி யோசிச்சப்ப, 'இது எப்படி வரணும், இதுல என்னவெல்லாம் இருக்கணும்'ங்கிற எந்தத் தெளிவும் இல்லை. அந்த நேரத்துல என் மாமனாரோட பழைய டைரி கிடைச்சது. அதுல அவர் தன்னோட முன்னோர்களைப் பத்தின தகவல்களை எழுதி வச்சிருந்தார். அதையே முதல் அத்தியாயமா எடுத்துக்கிட்டோம். அடுத்தடுத்து யோசிச்சதுல போதும், போதுங்கிற அளவுக்கு ஐடியாக்கள் வந்து விழுந்தது'' என்கிறார் 'ஹம்' புத்தகத்தின் பிரதான ஆசிரியரான மஞ்சு ஜெயின்.





மஞ்சு



பத்மினி

முதல் அனுபவங்களுக்கென தனி பகுதி... திருமணம், அதைத் தொடர்ந்த இனிமையான நாட்களின் அனுபவங்கள், குழந்தை பிறந்தபோது எப்படியிருந்தது, என்ன பெயர், எதற்காக வைக்கப்பட்டது, அது மழலைக்குரலில் 'அம்மா' என அழைத்த அந்த நாள், எழுந்து, விழுந்து, சுவர்களைப் பிடித்து திடீரென நடக்க ஆரம்பித்த முதல் நாள், தெளிவான குழப்பங்களுடன், 'நீயும் என்னோட வந்து படியேன்' என அம்மாவை துணைக்கழைத்து பார்த்துவிட்டு, தனியே பள்ளிக்குப் போன நாள்... இப்படி எல்லா அனுபவப் பதிவுகளுக்கும் இடமிருக்கிறது.

வாழ்க்கையில் நாம் நன்றி சொல்ல வேண்டிய நபர்கள், மன்னிப்பு கேட்க வேண்டிய நபர்கள், அவமானங்கள், பொக்கிஷமாகப் பாதுகாக்கும் பொருட்கள், குழந்தைகள் கேட்கிற ஏடாகூடக் கேள்விகள், அவற்றுக்கு சொல்லும் பதில்கள்... இப்படி வித்தியாச தலைப்புகளில் விரிந்து கொண்டே போகிறது புத்தகம்.

பிரமாண்ட ஆலமரத்தின் படத்தையே அட்டையாக டிசைன் செய்திருக்கிறார்கள் இந்தத் தோழிகள்.

''விழுதுகள், கிளைகள்னு விரிஞ்சு நிக்கிற ஆலமரம் மாதிரிதான் நம்ம குடும்பங்களும்'' என்று விளக்கமும் தருகிறார்கள்.




''டி.வி. பார்க்கிறதையும், ஹோட்டலுக்குப் போய் சாப்பிடறதையும் தவிர, குடும்பத்தோட சேர்ந்து செலவழிக்கிற நேரமே அபூர்வமா கிட்டு வருது. இந்தப் புத்தகம், அன்புக்கும், உறவுக்குமான பாலமா அமையும்'' என்கிறார்கள் இவர்கள்.

உறவுகள் தொடர்கதை!

- சாஹா

படங்கள்: புதூர் சரவணன்